## மருந்துகளை சேமித்து வைக்கும் போது

- குளிரூட்டியில் வைக்கும் போது ஒவ்வொரு மருந்திலும் பெயர்களை தனித்தனியாக எழுதி வைக்கவும்.
- பானி மருந்துகளாயின் முகஅட்டை நனையாது பயன்படுத்தவும். (நனையும் படசத்தில் முகஅட்டையை வாசிப்பது கடினமாகும்)



### மருந்துகளினால் நஞ்சேற்படலை தடுத்தல்

- மருந்துகளை சிறுவர்கள் எடுக்காதவிடத்து வைக்கவும்.
- மருத்துவ ஆலோசனையின்றி எந்த மருந்தையும் உட்கொள்ள வேண்டாம்.
- மருந்தினால் நஞ்சேற்படின உடனடியாக அருகிலுள்ள வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லவும்.


**011-2686143**
**011-2691111** நீட்சி **2430**

Email : npdic.nhs@gmail.com
infotoxlanka@gmail.com

https://www.facebook.com/ NTPICSL

http://www.toxbaselanka.info



அனுசரணை- சுகாதார,போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு


# மருந்துகளினால் நஞ்சேற்படலை தடுப்போம்




தேசிய நஞ்சு தொடர்பான தகவல் மையத்தினால் வெளியிடப்பட்டது

## மருந்துகளினால் நஞ்சேற்படல் என்பது என்ன?

எந்த ஒரு மருந்தையும்

- பரிந்துரைக்கப்பட்டதை விட அதிக தடவைகள் உட்கொள்வதன் மூலமோ அல்லது
- ஒரே தடவையில் அதிகளவான மருந்துகளை உட்கொள்வதன் மூலமோ ஏற்படலாம்.

### மருந்துகள் மூலம் நஞ்சேற்பட்டு அனுமதிக்கப்படுபவர்களில் அதிகமானோர்

- சிறுவர்கள்
- வயோதிபர்கள்
- மனநோயாளிகள்
- குணப்படுத்தப்பட முடியாத மற்றும் நீண்டகால நோய்களினால் பாதிக்கப்பட்டோர்.

### பொதுவாக நஞ்சேற்படுவதற்கான காரணங்கள

- சிறுவர்கள் இலகுவாக எடுக்கக் கூடியதாக இருத்தல..
- வயோதிபர்கள் தவறுதலாக அதிகளவான மருந்துகளை உட்கொள்ளல்.
- மனநோயாளிகள் மற்றும் நீண்ட கால குணப்படுத்த முடியாத நோயினால் பாதிக்கபட்டோர் வேண்டுமென்று அதிக மருந்தை உட்கொள்ளல்.
- ஒழுங்கான மருத்துவ ஆலோசனையின்றி மருந்துகளை உட்கொள்ளல்.



### மருந்துகளினால் நஞ்சேற்படலை இழிவாக்க

- மருந்துகளை சிறுவர்கள் எடுக்காதவிடத்து வைக்கவும்.
- வயோதிபர்கள் மற்றும் மனநோயாளிகளுக்கு மருந்து வழங்கும் போது மற்றவருடைய உதவியை நாடவும்.
- இத்தேவைக்காக மருந்துப்பெட்டிகளை (Dosette box) பயன்படுத்தவும்.




- மருத்துவ ஆலோசனையின்றி எந்த மருந்தையும் உட்கொள்ள வேண்டாம் (வைத்தியரினால் பரிந்துரைக்கப்பட்ட கால அளவுக்கேற்ப சரியான அளவு மருந்தை மாத்திரம் உட்கொள்ளவும்).



### நஞ்சேற்பட்ட நிலையில்

- நோயாளியை அமைதிப்படுத்த முயற்சிக்கவும்.
- அருந்துவதற்கு எதையும் கொடுக்கவேண்டாம்.
- வாந்தி எடுப்பதை தூண்ட வேண்டாம்.
- நோயாளி வாந்தி எடுத்தால் அவரை இடதுபக்கமாக சரித்து நாடியை உயர்த்தி படத்தில் காட்டப்பட்டவாறு வைக்கவும். (Recovery position)



- நோயாளி உட்கொண்ட எஞ்சிய மருந்துகளை எடுத்துக்கொண்டு நோயாளியை அருகிலுள்ள வைத்தியசாலைக்கு உடனடியாக கொண்டுசெல்லவும்.
- தேவையேற்படின் 1990 அம்பியுலன்ஸ் சேவையை நாடவும்.

### நோயாளிக்கான சிகிச்சையின் போது முக்கியமானவை

- உட்கொண்ட மருந்தின் பெயர்
- எடுக்கப்பட்ட மருந்தின் அளவு
- மருந்து உட்கொண்ட நேரம்